## லுணுகம்வெஹெர பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

-----------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.1 மற்றும் 1.3.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லுணுகம்வெஹெர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 265,674 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 116,715 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களின் பெறுமதி 110,741 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 7,201,255 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்களும் காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்காமல் உள்ளுராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 92,420 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 61,925 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 770,772 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 832,697 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையினால் வருமான சேகரிப்பின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட மொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 19,185,414 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 18,338,404 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான சேகரித்தலின் செயல்முன்னேற்றம் 95 சவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 616,203 தொகையான நிலுவை வருமானங்களிலிருந்து ரூபா 604,203 அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமான அறவீடுகளின் செயல்முன்னேற்றம் 98 சவீதமாக இருந்தது.

#### 2.2.2 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுச் சந்தையின் இரண்டு கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 ஆன ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தையின் கடையொன்றிலிருந்து மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 2,000 ஆக இருந்த போதிலும், ரூபா 800 ஆன மாதாந்தம் பழைய வாடகை அறவிடப்பட்டிருந்தது.

#### 2.2.4 அறிவித்தல் பதாகை கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(XXX) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 45,000 கூட்டுத்தொகையான அறிவித்தல் பதாகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 207,509 தொகையும் முத்திரைக்கட்டணமாக ரூபா 627,500 எனக் கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

வருடாந்த பாதீட்டின் மூலம் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 27,275,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உரிய நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் மூலதன மானியம் கிடைக்கப்பெறாமையால் முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 06 ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த கொங்கிரீட் கலவை இயந்திரம் அத்திகதி முதல் எவ்வித பயனுள்ள செயற்பாடொன்றிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் கட்டிடம் அமைந்துள்ள காணி உட்பட 05 காணிகள் மற்றும் 14 மயான பூமிகள் என்பவற்றின் உரித்தை கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

அபயபுர மெத வீதிக்கு கொங்கிரீட் கற்கள் பிடித்து அபிவிருத்தி செய்யும் இரண்டாம் கட்டத்தின் பிடிகாசு இரண்டு முறை கொடுப்பனவு செய்தமையால் ரூபா 41,013 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 23 செலவின விடயங்களுக்காக ரூபா 1,005,000 கூட்டுத்தொகையான முழு நிதி ஏற்பாடும் மேலும் 07 செலவின விடயங்களில் ரூபா 36,215,251 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் 05 வருமான விடயங்களில் அடைந்து கொள்ள முடியாத ரூபா 36,956,464 கூட்டுத்தொகையான இலக்குகளும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்